ஏப்ரல் – ஜுன் 2023-ஆம் மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of April -June 2023)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009

**கடித எண்.4767/பக5(1)/2023-1, நாள் : 28.04.2023.**

அனுப்புநர்

திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

28/04/23

பெறுநர்

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

63

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – 2008-09, 2009-10 மற்றும் 2010-2011 ஆம் கல்வியாண்டுகளில் தரமுயர்த்தப்பட்ட அரசு / நகராட்சி மற்றும் / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்ட மொத்தம் 1512 தற்காலிக பணியிடங்களில் 912 தற்காலிக பணியிடங்களுக்கு மட்டும் ஏப்ரல்,மே மற்றும் ஜுன் 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வி(இ1)த் துறை, நாள்: 15.05.2008.
2. அரசாணை (நிலை) எண்.109, பள்ளிக் கல்வி(இ1)த் துறை, நாள்: 04.05.2009.
3. அரசாணை (நிலை) எண்.162, பள்ளிக் கல்வி(இ1)த் துறை, நாள்: 13.07.2009.
4. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வி(மேநிக2)த் துறை, நாள்.24.04.2009.
5. அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக் கல்வி(மேநிக2) த்துறை, நாள்.15.07.2009.
6. அரசாணை (நிலை) எண்.232, பள்ளிக் கல்வி(இ1)த் துறை, நாள் 11.08.2010.
7. அரசாணை (1டி) எண்.215, பள்ளிக்கல்வி [பக5(1)]த் துறை, நாள் 29.07.2022.

8. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.000592/ எல்/இ3/2019, நாள் 09.05.2019.

-----

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 2008 - 2009 ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டு, அவ்வாறு நிலையுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு 2008 - 2009 ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2009 – 2010 ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் நிலையுயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு 500 முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், 2009 – 2010 ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டு, இப்பள்ளிகளுக்கு 2009 – 2010 ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 2010 - 2011 ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், 2009 - 2010 ஆம் கல்வியாண்டில் 15 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டு, இப்பள்ளிகளுக்கு 2009 – 2010 ஆம் கல்வியாண்டில் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2010 - 2011 ஆம் கல்வியாண்டில் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

4. பார்வை நான்கு மற்றும் ஐந்தில் காணும் அரசாணைகளில், 2009-10ஆம் கல்வியாண்டில் முறையே 100 மற்றும் 15 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, இப்பள்ளிகளுக்கு பள்ளிக்கு 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 575 (115 x 5 = 575) முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

5. பார்வை ஆறில் காணும் அரசாணையில் 2009 -2010 ஆம் கல்வியாண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து துவக்கப்பட்ட 7 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 7 தற்காலிக தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

6. பார்வை ஏழில் காணும் அரசாணையில், பார்வை ஒன்று முதல் ஆறு வரை காணும் அரசாணைகளின்படி தோற்றுவிக்கப்பட்ட 1512 தற்காலிக பணியிடங்களில், 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2022 முதல் 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு ஏப்ரல் 2023 ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

8. மேற்படி தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜுன்-2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல், மே மற்றும் ஜுன்-2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334, நிதி(வ.செ. பொது-I), நாள் 22.10.2022 இன்படி நிதித் துறையின் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்:
பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

Joint Director (NSS),
Commissionerate of School Education,
Chennai-600 006.